சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 30.09.2024

PW2:திருமலைக்கண்ணன் த/பெ– கோவிந்தராஜ்

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வா.சா.1 கணேசமூர்த்தி கேட்டுக்கொண்டதின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.1 வழக்கறிஞர் தயார் செய்த வாக்குமூலத்தில் தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். எனக்கு எழுத, படிக்க ஓரளவு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எனது முகவரியில் கதவு எண், தெரு, ஊர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது முகவரியை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி குடியிருக்கும் முகவரி தெரியும், ஆனால் கதவு எண், தெரு பெயர் தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. நான் வா.சா.1 க்கு ஆதரவாக கையூட்டு பெற்றுவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும், எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.